**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 103/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW 3 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 the day of 11th day of August 2025.

(A1 absent. Petition filed and allowed. A2 to A10 present, A12 to A25 present.
A11 died C/A)

**S.C.No.103/2022**

**11.08.2025.**

**அ.த.சா.ஆ.3 – திரு. பாபு த/பெ. துரைசிங்கம்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிகக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கனகம்மாசத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஊரில் சாமி ஊர்வலத்திற்கு 16.1.2020 அன்று வேறு ஊரை சேர்ந்தவர்கள் மோளம் அடிக்க வந்தார்கள். அவர்கள் கூலூர் -ஐ சேர்ந்தவர்கள். நானும் ஏழுமலையும் கேட்பதற்கு என்று போனோம். நாங்க யாரையாவது கூப்பிடுவோம் என்று சண்டைக்கு வந்தார்கள். குமார், மாசி, குமரகுரு அவர்கள் பிசி வகுப்பை சேர்ந்தவர்கள். நாங்கள் யாரையாவது கூப்பிட்டு மோளம் அடிப்போம் நீங்க ஏன் கேட்கிறீர்கள் என்று கேட்டு அடித்தார்கள். என்னுடன் ஏழுமலை இருந்தார். அவரையும் அடித்தார்கள். வேறு எதுவும் சொல்லவில்லை. காவல் நிலையத்திற்கு சென்று சொன்னோம்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு பிறழ் சாட்சியாக பாவிக்கப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கூலூர் ஊர்காரர்களை வைத்து மோளம் அடிப்பீர்களா என்று கேட்டதற்கு ஊர்காரர்கள் என்னையும் ஏழுமலையையும் பார்த்து ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக திட்டி நீங்கள் 200 பேர் இருக்கிறீர்கள் நாங்கள் 2000 பேர் உள்ளோம் உங்களால் எதுவும் செய்ய முடியாது என்று கூறி எங்கள் இருவரையும் அடித்து

உதைத்து ஊர்காரர்களான குமார் (எ) குமரவேல், கார்த்தி, துரை, சங்கர் ஆகியோர் எட்டி உதைக்க அந்த செயலை ஊக்குவிக்கும் நோக்கில் அங்கிருந்தவர்களும் ஊர்காரர்களும் அடித்து துரத்தியதாகவும் நாங்கள் அங்கிருந்து அடி தாங்காமல் காலனிக்கு ஓடியதாகவும் இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட காலனியை சேர்ந்த முனுசாமி சம்பவம் நடந்த சந்து தெரு வந்து சம்பவம் குறித்து ஊர்காரர்களை கேட்டதாகவும் அவரையும் முனுசாமியையும் ஊர்காரர்கள் ஜாதி பெயரை சொல்லி திட்டி அடித்ததாகவும் அதை கேள்விப்பட்டு அங்கு போன முனுசாமியின் அம்மா நாகம்மா, உறவினர் சுந்தரி, வேலாயுதம் ஆகியோர்களையும் ஊர்காரர்கள் அடித்து காயப்படுத்தியதாகவும் காயப்பட்டவர்கள் அனைவரும் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்யப்பட்டு நீதிமன்றத்தில் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 103/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW 4 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 the day of 11th day of August 2025.

(A1 absent. Petition filed and allowed. A2 to A10 present, A12 to A25 present.
A11 died C/A)

**S.C.No.103/2022**

**11.08.2025.**

**அ.த.சா.ஆ.4 – திரு. ஏழுமலை த/பெ. முருகன்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிகக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கனகம்மா சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராடவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். 16.01.2020 தேதியன்று ஊரில் திருவிழாவிற்காக கூலூரை சேரந்தவர்கள் வைத்து மோளம் அடித்தார்கள். அதை கேட்க சென்றோம். என்னுடன் பாபு இருந்தார். மோளம் அடித்தவர்களிடம் கேட்டோம். அதன் பிறகு நீ ஏன் வந்து கேட்கிறாய் என்று பாபு, ஆறுமுகம் மற்றும் சிலர் கேட்டார்கள். பின்பு தகாத வார்த்தைகளால் பறையன் என்று பேச ஆரம்பித்தார்கள். நீங்கள் 200 பேர் தான் இருக்கிறீர்கள் நாங்கள் 2000 பேர் இருக்கிறோம் என்று ஜாதி பெயர் சொல்லி அசிங்கமாக பேச ஆரம்பித்தார்கள். அடிக்க ஆரம்பித்தவுடன் நாங்கள் எங்கள் காலனி தெருவுக்கு ஓட ஆரம்பித்தோம். அதன் பிறகு வேலாயுதம், சுந்தரி, நாகம்மாள், முனுசாமி ஆகியோர்கள் வந்தார்கள். முனுசாமி என்பவர் பாலு, ஆறுமுகம் மற்றும் சிலரிடம் கேட்டார்கள். பாலு மற்றும் ஆறுமுகம் மற்றும் ஊர்காரர்கள் முதலியார் இனத்தை சேர்ந்தவர்கள். சுமார் 20, 25 பேர் முனுசாமியை அடிக்க ஆரம்பித்தார்கள். வேலாயுதம், சுந்தரி, நாகம்மாள் ஆகியோர்களை அடித்தார்கள். ஆகவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அதன் பின்பு கனகம்மாசத்திரம் காவல் நிலையம் சென்று முனுசாமி என்பவர் புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் ஆதிதிராடவர் வகுப்பை சேர்ந்தவர் என்பதற்கு என்னிடம் சான்று உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது நான் சம்பவத்தின் போது கூலி வேலை செய்து வந்தேன். நான் அலுவலக உதவியாளராக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். என் தந்தை அரசு ஊழியராக பணிபுரிந்தார். என் தாயார் விவசாய கூலி வேலை செய்து வந்தார். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் தோப்பூர் கிராமம் என்றால் சரிதான். எனக்கு சிறுவயதிலிருந்தே எதிரிகளை தெரியும். நானும் எதிரிகளும் மாமன், மச்சான், அண்ணன், தம்பி என்று உறவு கூறி அழைப்போம் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் சண்டை சச்சரவு எதுவும் நடந்தது இல்லை என்றால் சரிதான், சம்பவத்தை தவிர. மோளம் அடிக்க வந்த கூலூர் ஊர்காரர்களை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நானும் பாபுவும் தான் போய் கேட்பதற்கு சென்றோம். அப்போது என்ன நடந்தது என்று மற்ற யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து முனுசாமியிடம் நான் எதுவும் கூறினேனா என்றால் சம்பவம் நடந்த பிறகு கூறினேன். அதுபோல நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் கூறவில்லை. முனுசாமி இது குறித்து என்னிடம் கேட்கவில்லை. இதுகுறித்து தனியாக புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. என்னை யார் அடித்தார்கள் என்றால் இரண்டு பேர் அடித்தார்கள் யார் என்று தெரியவில்லை. என்னை யார் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஆறுமுகமும், பாலுவும் திட்டினார்கள். பாலு என்பவர் அரசு போக்குவரத்து துறையில் ஓட்டுநராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். சம்பவத்தின்போது பாலு என்பவர் ஊரில் இல்லை பணியில் இருந்தார் என்றால் சரியல்ல.

முனுசாமியை அடித்ததை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. வேலாயுதம், சுந்தரி, நாகம்மாள் ஆகியோர்களை அடித்ததை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. இது குறித்து முனுசாமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் நானும் காவல் நிலையத்திற்கு சென்றேன். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஊரில் வருடா வருடம் மாட்டு பொங்கலின் போது விளையாட்டு போட்டிகள் நடைபெறும் என்றால் சரிதான். அவ்வாறு நான் சொன்ன தேதியன்று விளையாட்டு போட்டிகள் நடந்துகொண்டிருந்த போது நான் அங்கு சென்று சிவசக்தி மற்றும் அவரை சார்ந்தவர்களை அடித்தேன் என்றால் சரியல்ல. ஆகவே சிவசக்தி என்பவர் நான் உட்பட 11 பேர்களின் கனகம்மாசத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பேரில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். 2019 ல் ஊராட்சிமன்ற தேர்தலுக்கு சிவசக்தி மற்றும் முனுசாமி ஆகியோர் போட்டியிட்டார்கள் என்றால் சரிதான். அந்த தேர்தலில் முனுசாமிக்கு ஆதரவாக செயல்பட்டேன் என்றால் சரிதான். முனுசாமி என்னுடைய பகுதியை சேர்ந்தவர். எதிரிகள் சிவசக்திக்கு ஆதரவாக வேலை செய்தார்கள் என்றால் சரிதான். தேர்தலில் சிவசக்தி வெற்றி பெற்றார் என்றால் சரிதான். அப்போதிலிருந்து எங்கள் பகுதியை சேர்ந்தவர்கள் அவர்கள் பகுதியில் சென்று வேலை பார்ப்பது கிடையாது என்றால் சரிதான் அவர்களும் எங்கள் பகுதிக்கு வந்து வேலை பார்க்க மாட்டார்கள். புகார் எத்தனை மணிக்கு சென்று யார் யார் எல்லாம் கொடுத்தோம் என்றால் காலனியை சேர்ந்த 63 பேர்கள் கனகம்மாசத்திரம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். புகார் எந்த தேதியில் கொடுத்தோம் என்றால் 17.01.2020 தேதியன்று சென்று மதியம் 2.00 மணியளவில் புகார்

கொடுத்தோம். அந்த புகாரில் 63 பேரும் கையொப்பம் இட்டோமா என்றால் 200 பேரும் கையொப்பம் போட்டோம். மருத்துவமனையில் வேலாயுதம், நாகம்மா, சுந்தரி, பாபு ஆகியோர்களை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு சென்று 17.01.2020 அன்று காலை வெளிநோயாளிகள் பிரிவில் சீட்டு வாங்கி 10.00 மணியளவில் சேர்த்தோம். அதன் பின்னர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். போலீசார் மறுநாள் 18.01.2020 தேதியன்று காவல் நிலையத்தில் வைத்து காலை 10.00 மணியளவில் காவல் ஆய்வாளர் விசாரித்தார். அதற்கு பின்பு என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அரசு துறையை சேர்ந்த வேறு யாராவது என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் தேர்தல் முன்விரோதம் காரணமாக பொய்யான புகாரை எதிரிகள் மீது கொடுத்துள்ளேன் என்றாலும் எங்கள் மீது சிவசக்தி கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 103/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW 5 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 the day of 11$^{th}$ day of August 2025.

(A1 absent. Petition filed and allowed. A2 to A10 present, A12 to A25 present.
A11 died C/A)

**S.C.No.103/2022**

**11.08.2025.**

**அ.த.சா.ஆ.5 – திரு. மாரிமுத்து த/பெ. ஆறுமுகம்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் தற்போது கனகம்மா சத்திரத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். 16.01.2020 தேதியன்று பசங்க எல்லாம் சேர்ந்து மோளம் அடிக்க வேறு ஊரிலிருந்து ஆட்கள் திருவிழாவிற்கு வந்துள்ளார்கள் என்று பாபு, முனுசாமி, ஏழுமலை ஆகியோர்கள் வந்து நாங்கள் இருக்கும் போது ஏன் மற்ற ஊர்காரர்களை வைத்து அடிக்கிறீர்கள் என்று எங்கள் ஊர்காரர்களிடம் கேட்டார்கள். ஆகவே சண்டை ஏற்பட்டது. சண்டையில் கோட்டி, நாகம்மாள், முனுசாமி ஆகியோர்களுக்கு அடிப்பட்டது. பர பசங்க என்று திட்டி அடித்தார்கள். மாசி என்பவர் மட்டும் பெயர் தெரியும் மற்றவர்கள் இருட்டில் இருந்ததால் பெயர் தெரியவில்லை. என்னுடன் அண்ணாமலை, அன்பு, வேலாயுதம் எல்லாம் பஜனை கோவில் தெருவிலிருந்து பிரச்சனை குறித்து கேள்விப்பட்டு காலனி தெருவிற்கு ஓடிவந்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 12ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்பதற்கு என்னிடம் சான்றிதழ் உள்ளது என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் தோப்பூர் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்றால் சரிதான். எதிரிகளை நான் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்று கூப்பிடுவது வழக்கம் என்றால் சண்டைக்கு

முன்பாக அவ்வாறு தான் கூறுவேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவத்தை பற்றி கேள்விபட்டு அங்கு ஓடி சென்று சண்டையை விலக்கிவிட்டோம். அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அந்த கூட்டத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் முனுசாமிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**